# பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் (PMFBY)
# சம்பா சிறப்பு பருவம் மற்றும் ராபி பருவம் (2024 - 2025)

HDFC ERGO

**தமிழக அரசு மற்றும் ஒன்றிய அரசு மூலம் செயல்படுத்தப்படுகிறது**

**பாதுகாப்பான விவசாயிகள், நாட்டின் பெருமை**



**விவசாயிகளுக்கு உதவுவதற்கு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கான கேள்வித்தாள்:**

**கேள்வி : பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் என்பது என்ன?**

**பதில் :** பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. ஏதிர்பாராத இயற்கை நிகழ்வுகளால் பயிர் சேதம் ஏற்படும் போது விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**கேள்வி: பயிர் காப்பீட்டை யார் பெற்று பயனடையமுடியும்?**

**பதில் :** தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பயிர்களை பயிரிடும் அனைத்து கடன் பெறும் மற்றும் கடன் பெறாத (இணை சாகுபடியாளர்/குத்தகைதாரர்) விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். கடன் பெறும் விவசாயிகள் பதிவு செய்வதற்கான கடைசி தேதிக்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட வங்கி கிளைக்கு ஒரு விலகல் படிவம் அல்லது சுய உறுதிமொழியை எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிப்பதன் மூலம் திட்டத்தை விட்டு விலகிக் கொள்ளலாம்.

**கேள்வி: பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான காப்பீட்டுத் தொகை என்னவாக இருக்கும்?**

**பதில் :** மாநில அரசினால் அறிவிக்கப்பட்டபடி.

**கேள்வி: பயிர் காப்பீட்டிற்காக விவசாயினால் செலுத்தப்பட வேண்டிய பிரீமியம் கட்டணங்கள் என்ன?**

**பதில் :** உணவு தானியப் பயிர் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகையில் 1.5%, தோட்டக்கலைப் பயிர் மற்றும் பணப்பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகையில் 5% ம் செலுத்த வேண்டும்.

**கேள்வி : பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் என்ன இடர்கள் காப்பீடு செய்யப்படுகின்றன?**

**பதில் :** இந்தத் திட்டத்தின் கீழ் பயிர் இழப்பிற்கு வழிவகுக்கும் பயிர் இடர்கள் பின்வருமாறு:

1) விதைப்பு/நடவு செய்ய இயலாத நிலை/முளைப்பு இல்லாமை: மோசமான வானிலை மாற்றங்கள் மற்றும் குறைவான மழையால் காப்பீடு செய்யப்பட்ட பகுதிகளில் விதைப்பு/நடவு செய்ய இயலாத நிலை/முளைப்பு இல்லாமை.

2) விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலம்: வறட்சி/மழையின்மை/வெள்ளம், மழை நீரால் வயல்களில் பயிர் நீரில் மூழ்குதல்/பூச்சி மற்றும் நோய் தாக்குதல்/நிலச்சரிவு, மின்னலால் ஏற்படும் இயற்கை தீ, புயல், சூறாவளி, ஆலங்கட்டி மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு விரிவான காப்பீடு வழங்கப்படும்.

3) அறுவடைக்குபின் ஏற்படும் இழப்புகள்: அறுவடைக்கு பின் அதிகபட்சம் 14 நாட்களுக்கு வெட்டி பரப்பியோ/சிறிய கட்டுகளாக கட்டியோ வயலில் உலரவைக்கப்பட்டுள்ள பயிர்களுக்கு ஆலங்கட்டி மழை, புயல், புயலினால் ஏற்படும் மழை மற்றும் பருவம் தவறிய மழை போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படும்.

4) பகுதி சார்ந்த பல்வேறு இயற்கை இடர்பாடுகள் தெரிவு செய்யப்பட்ட பகுதியிலோ அல்லது தெரிவு செய்யப்பட்ட பகுதி சார்ந்த வயலிலோ, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பயிர் நீரில் மூழ்குதல், இடிமின்னலுடன் கூடிய திடீர் மழை, மின்னலால் ஏற்படும் இயற்கை தீ போன்ற நிகழ்வுகளால் ஏற்படும் பயிர் இழப்பிற்கு கள அளவில் தனிநபர் காப்பீடு செய்யப்படுகிறது.

**கேள்வி: பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் என்ன இடர்கள் காப்பீடு செய்யப்படுவதில்லை?**

**பதில் :** இந்தத் திட்டத்தின் கீழ் போர் மற்றும் அணு ஆபத்து, தீங்கிழைக்கும் சேதம் மற்றும் மற்ற தடுக்கக்கூடிய இடர்கள் காரணமாக ஏற்படும் இழப்பு விலக்கப்படுகிறது.

**கேள்வி: இந்தத் திட்டத்தின் கீழ் கடன்பெறாத விவசாயி எவ்வாறு காப்பீடு எடுத்துக் கொள்ள முடியும்?**

**பதில்:** பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற விரும்பும் கடன்பெறாத விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள வங்கி கிளை/கூட்டுறவு சங்கம்/பொது சேவை மையம் (CSC)/காப்பீட்டு நிறுவனம் அல்லது தங்களுடைய அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் தொடர்பு கொள்ளலாம் அல்லது நேரடியாக தேசிய பயிர் காப்பீட்டு இணையதளம் www.pmfby.gov.in வாயிலாக உரிய தேதிக்கு முன் ஆன்லைன் மூலம் விண்ணப்ப படிவத்தை நிரப்பி அனுப்பலாம்

**கேள்வி: பயிர் காப்பீடு பெறுவதற்காக கடன் பெறாத விவசாயி சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் என்ன?**

**பதில்:** கடன் பெறாத விவசாயிகள் முன்மொழிவு படிவம், பதிவுப் படிவம், அடங்கல், ஆதார் அட்டையின் நகல் மற்றும் வங்கி பாஸ் புக்கின் முதல் பக்கம்.

**கேள்வி: பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஒரு காப்பீட்டு பகுதி என்பது என்ன?**

**பதில் :** நெல் - II அறிவிக்கப்பட்ட பகுதி கிராமம் மற்றும் அறிவிக்கப்பட்ட இதர பயிருக்கு குறு வட்டம்.

**கேள்வி : உள்ளூர் பேரிடர்களின் காரணமாக ஏற்படும் பயிர் இழப்பு சம்பவங்கள் குறித்து தெரிவிக்கும் செயல்முறை என்ன?**

**பதில் :** பாதிக்கப்பட்ட காப்பீடு செய்துகொண்ட விவசாயி சம்பவத்தின் 72 மணிக்குள்ளாக காப்பீட்டு நிறுவனத்தின் கட்டணமில்லா எண் 14447 மீது நேரிடையாக தெரிவிக்க வேண்டும் அல்லது வங்கி/வேளாண் துறை அதிகாரிகள் மூலம் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். விவசாயியின் பெயர், கைப்பேசி எண், தெரிவு செய்யப்பட்ட பகுதி, வங்கி கணக்கு எண், இடர்பாட்டின் வகை, பாதிக்கப்பட்ட பயிர்கள் போன்ற தகவல்களை குறிப்பிட வேண்டும்.



| மாவட்டத்தின் பெயர் | பயிர் பெயர் | காப்பீட்டுத் தொகை (ரூ/ஹெக்டர்) | விவசாயி பிரீமியம் (ரூ/ ஹெக்டர்) | பிரீமியம் செலுத்துவதற்க்கான கடைசி தேதி |
|---|---|---|---|---|
| இராணிப்பேட்டை | நெல் - II | 85215 | 1278.23 | 15/11/2024 |
| | நெல் - III | 85215 | 1278.23 | 31/1/2025 |
| | சிவப்பு மிளகாய் | 60639 | 3031.95 | 31/1/2025 |
| | நிலக்கடலை | 72865 | 1092.98 | 20/1/2025 |
| | கத்தரிக்காய் | 49400 | 2470.00 | 31/1/2025 |
| | வாழை | 141902 | 7095.10 | 28/2/2025 |
| | வெண்டைக்காய் | 57922 | 2896.10 | 15/2/2025 |
| | கரும்பு | 143260 | 7163.00 | 31/3/2025 |
| கடலூர் | உளுந்து | 38038 | 570.57 | 15/11/2024 |
| | பருத்தி - II | 20327 | 1016.35 | 15/11/2024 |
| | மக்காச்சோளம் - II | 61750 | 926.25 | 31/10/2024 |
| | நிலக்கடலை | 72865 | 1092.98 | 20/1/2025 |
| | நெல் - II | 90155 | 1352.33 | 15/11/2024 |
| | நெல் - III | 90155 | 1352.33 | 28/2/2025 |
| | வாழை | 138938 | 6946.90 | 28/2/2025 |
| | கத்தரிக்காய் | 27294 | 1364.70 | 31/1/2025 |
| | நெல் தரிசு பச்சைப் பயறு | 14820 | 222.30 | 17/2/2025 |
| | நெல் தரிசு உளுந்து | 14820 | 222.30 | 17/2/2025 |
| | நெல் தரிசு பருத்தி | 29222 | 438.33 | 31/3/2025 |
| | மரவள்ளிக்கிழங்கு | 71383 | 3569.15 | 28/2/2025 |
| | கரும்பு | 148200 | 7410.00 | 31/3/2025 |


பயிர்க் கடன்கள் பெற்றுக்கொள்ளும் விவசாயிகள் இந்தத் திட்டத்திலிருந்து விலகி இருப்பதற்கு சேர்க்கைக்கான இறுதி தேதியிலிருந்து 07 நாட்களுக்கு முன்பாக தொடர்புடைய வங்கிக்கு எழுத்து மூலம் விலகி இருப்பதற்கான அறிவிப்பு அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

Bank Branch · CSC e-Governance Services India Limited · www · Co-operative committee

கடன் பெறாத விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள நிதி நிறுவனங்கள் அதாவது தேசியமயமாக்கப்பட்ட வங்கி, கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் (PACS), கிராமப்புற வங்கிகள்/பொது சேவை மையம் (CSC) மூலம் /சுயமாக இணையதளம்: https://pmfby.gov.in./ மூலம் தங்கள் பயிரை காப்பீடு செய்து கொள்ளலாம். இந்திய அரசு கால் சென்டர் எண் 14447.

உள்ளூர் பேரிடர்கள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் அல்லது கோருரிமை தகவல் பற்றிய தகவலைப் பெற, தயவுசெய்து பிளே ஸ்டோர் லாக்இன் செய்து க்ராப் இன்ஷ்யூரன்ஸ் ஆப்-ஐ பதிவிறக்கம் செய்யவும்.

GET IT ON Google Play






**திட்டத்திற்கான மேலும் தகவலைப் பெற, தயவுசெய்து அழைக்கவும் :**
**கட்டணமில்லா எண்: 14447**
**மின்அஞ்சல்: E-mail: pmfby.tamilnadu@hdfcergo.com**

ஹெச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட். ஐஆர்டிஏஐ பதிவு எண் 146. CIN: U66030MH2007PLC177117. பதிவு மற்றும் கார்ப்பொரேட் அலுவலகம் : முதல் தளம், ஹெச்டிஎஃப்சி ஹவுஸ், 165-166, பேக்பே ரெக்ளமேஷன், ஹெச். டி. பாரேக் மார்க், சர்ச்கேட், மும்பை - 400020. ஆபத்து காரணிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து விற்பனையை முடிக்கும் முன்பாக விற்பனைச் சிற்றேட்டை/தகவல் தொகுப்பு அறிக்கையை கவனமாகப் படிக்கவும். UIN: Pradhan Mantri Fasal Bima Yojana - IRDAN125P0003V01201617. CSC - Pradhan Mantri Fasal Bima Yojana-HDE-AG-P18-25-V01-17-18 UID: 16154.